## ஜூன் - 22

**"உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்."**

**- 1கொரி 4 : 2**

**"அவனுடைய திறமைக்குத் தக்கதாக."**

**- மத் 25 : 15.**

கொடுக்கப்பட்ட "திரவியம்" எல்லாருக்கும் சமமாக இருந்தது. எல்லா தேவனுடைய ஜனங்களுக்கும் பொதுவாக இருக்கிற தெய்வீக கிருபையின் ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக இருக்கிறது. அதாவது, நீதிமானக்கப்படுதல், நம்முடைய இயற்கையான சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு மற்ற வரப்பிரசாதங்கள் அளவில் வித்தியாசப்படுகின்றன. உதாரணமாக தேவனுடைய வார்த்தையும், ஆவியும், நம்முடைய நீதிமானாக்கப்படுதல் பிதாவினால் திட்டமிடப்படுகிறபோது, அது இயேசுவிலிருந்து கிடைக்கிற ஒரு கிருபை வரமாய் இருக்கிறது. ஏனென்றால், அதற்காகத் தன்னுடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தை அவர் கிரயமாக செலுத்தினார். ஒவ்வொருவருக்கும் கொடுக்கிப்பட்ட ஒரு ராத்தல் திரவியம் எல்லாரையும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியக்காரராக ஒரு பொதுவான நிலையில் வைத்து தன்னுடைய பலிகளினாலே ஒவ்வொருவரும் தன்னுடைய ஆர்வத்தைக் காட்ட அனுமதிக்கிறது. ஆனால் ஒவ்வொரு மனிதனுடைய திறமைக்கும் ஏற்றவாறு பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட "தாலந்துகள்" நாம் வைத்திருக்கிற அப்படிப்பட்ட திறமைகள் மூலமாக நாம் செய்கிற தேவனுடைய ஊழியத்திற்காக உள்ள சந்தர்ப்பங்களை குறிக்கின்றன. தேவனுடைய ஊழியத்தில் அவைகளை உபயோகிப்பதற்காக உள்ள சந்தர்பங்களோடு நமக்கிருக்கிற அறிவின் தாலந்தாகவோ அல்லது பணம் அல்லது செல்வாக்கு அல்லது நல்ல ஆரோக்கியம், அல்லது சமயம் அல்லது சமயத்திற்கேற்ற சாதுரியம் அல்லது நுண்ணறிவு போன்ற தாலந்துகளாகவோ இருக்கலாம்.

**- Z ’07, 63 (R 1972).**

மற்றவர்களுடைய ஆஸ்திகளின் நிர்வாகம் யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அவனே உக்கிராணக்காரனாவான். யாரிடம் அவ்விதமாக ஒப்படைக்கப்படுகிறதோ, அந்த உக்கிராணக்காரனிடமிருந்து நேர்மை, விசுவாசம், எஜமான் பக்தி இவைகளை எதிர்பார்க்க ஒப்படைத்தவருக்கு உரிமையிருக்கிறது. நாம் அவருடைய ஆஸ்தியில் எவ்வளவு யேகோவாவுக்குப் பிரதிஷ்டை செய்திருக்கிறோமோ அவ்வளவுக்கு அவர் நம்மை உக்கிராணக்காரனாக ஏற்படுத்தி, இந்த நமது உக்கிராண விசாரிப்பில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்க எதிர்ப்பார்க்கிறார். அவர் நிமித்தமாகவுள்ள சிரத்தையில் நம்முடைய உக்கிராண விசாரிப்பை உபயோகிப்பதற்கு அவசியமான எல்லா சந்தர்ப்பங்களையும் நமக்கு அவருடைய பங்காகக் கொடுக்கிறார். இப்படியாக அவருடைய அன்பு நம்முடைய மிகவும் விசுவாசமுள்ள ஊழியத்திற்குத் தகுதியுடையதாயிருக்கிறது.

**-P ’33, 79.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

1கொரி 2:3,4; 2கொரி 3:4,5; 6:1-10; மத் 25:14-30; லூக் 12:37,38; 42-48; 16:10-12; 19:13:27; ரோம 12:6-8; 1கொரி 12:7,11,29; எபே 4:44; தீத் 1:7; 1பேது 4:10.

**கோபுர வாசிப்பு** : Z ’14, 23 (R 5385)

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் திறமைக்குத் தக்கவாறு உண்மையுள்ள உக்கிராணக்காரனா யிருந்தேனா? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது எது? பலன் என்ன?